# பழங்கால இசைக் கருவிகள்

கலைமாமணி பா. தாமோதரன்
இசைக்கருவி கலை வல்லுநர்

பழங்கால முதற்கொண்டு நுண்கலையில் மிகவும் சிறந்து விளங்கியது நம் நாடு. முக்கியமாக இயல், இசை, நாடகம் மூன்றிலும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சங்க இலக்கியங்களிலும், பிறகு தோன்றிய சங்கக் காவியங்களிலும் அவற்றை அடுத்துத் தோன்றிய புராணங்களிலும், இதிகாசங்களிலும் இசையின் சிறப்பினையும், இசைக் கருவிகளின் பெருமையினையும் விளக்கமாகக் காண்கின்றோம். மேலும் மிகப் பழைய இலக்கணமான தொல்காப்பியத்திலும், திருவிளையாடல் புராணம், சிலப்பதிகாரம், தேவாரம், திருக்குறள், பரத சேனாதிபதியம், யாழ்நூல், சங்கீத ரத்னாகரம், பெரிய புராணம், இராமாயணம், பெரும்பாணாற்றுப்படை, அகநானூறு புறநானூறு முதலிய இலக்கியங்களிலும் இசை, நாட்டியம், இசைக் கருவி, நாடகம் முதலியவற்றின் சிறப்பினை நாம் காண்கின்றோம். பழங்காலக் கல்வெட்டுச் சிற்பங்களில் பலவிதக் கருவிகளைக் கண்கூடாகக் காண்கிறோம். சேர, சோழ, பாண்டிய அரசர்கள் இசைக் கருவிகள் நாட்டியக் கருவிகள் பற்றி மக்கள் அறியும் பொருட்டு, தரமாக இருக்க வேண்டும் என்ற கொள்கையுடன், தங்கள் காலத்தில் எழுந்த திருக்கோவில்களில் சிற்பங்கள் வாயிலாகச் செதுக்கி உள்ளார்கள்.

உலகில் தோன்றி வாழும் ஒவ்வொரு உயிரும் தனக்கென வெவ்வேறு குரல் அமைப்புகளையும் ஒலியையும் பெற்றுள்ளது. அதன் இயல்பை நன்கு அறிந்த மனிதன் ஒவ்வொரு வகையான ஓசையையும் ஒருங்கு திரட்டி 7 இசையாய் அமைத்து உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை என்று பெயரிட்டு அழைப்பானாயினன்.

அழகு என்பது காண்பாரால் விரும்பப்படும் தன்மையுடையது போல் கேட்கும் ஒவ்வொரு உயிரும் தம்மின் மயங்கி வசப்படுந் தன்மை உடையது இசையாம் எனின் வழுவாதன்றோ? இசையோ ஒரு பெருங்கடல். அதன் இமிழ்திரைகளே பண்கள். மட்கோலம் தோன்றி உயிரினம் தோன்றிப் பல்கி வளர்ந்த சான்று பேசும் எண்ணும் தோன்றியதாகவே, இயற்கையிலேயே அமைந்த மனிதக் குரல், இயல் மொழியிலிருந்து மாறுபட்டு இசைக்கத் தலைப்பட்டது. பிறகு பாடலாயிற்று. அது சாரிய வீணை என்று விளம்பப்பட்டது. அந்த இசைத் திறன் எல்லா உயிரினங்களையும் இயற்கை பூத கணங்களையும், இறைவனையும் தன் வயப்படுத்தலான் அருள் நோக்கை ஈர்த்தலான், இசைக்கலையின் புகழ் வெள்ளிடைமலை. அழுகின்ற குழந்தையை அமைதிப்படுத்தவும், சுருண்டு இருக்கும் பாம்பை நெளிந்தாடச் செய்யவும், கடலில் நீந்தும் மீனைக் கரையேறச் செய்யவும், சிதறுண்ட ஆந்தைகளைச் சேர்ந்து வரச் செய்யவும், மறைக் கதவு திறக்கவும், கண் துயிலவும், கண்ணினை விழிக்கவும், எரியினை ஊட்டவும், நீரினை ஊற்றவும், இசையைப் பயன்படுத்திய தமிழன் பெற்ற பெருமை வான்வரை உயர்ந்ததன்றோ?

இந்தியா முழுவதும் காணப்புகின், நால்வகை இசைக்கருவிகளும் சேர்ந்து 500 இசைக்கருவிகளுக்கு மேலாக உள்ளன. அவற்றில் சிறப்பாக, குறிப்பாக நம் தமிழகத்தில் மட்டும் வழக்காற்றிலும், வரலாற்றிலுமாக ஏறக்குறைய 250 இசைக்கருவிகள் உள்ளன என்பதைக் காணும் போது நம்மனம் இறும்பூது எய்துகின்றது.

இசைக் கருவிகளைத் தரத்திற்கு தக்கவாறு, இசைக்குத் தக்கவாறு இடத்திற்கு ஏற்றவாறு பாகுபடுத்தி அவற்றிற்கு பண் அமைத்து கண்ணெனக் காத்துள்ள தமிழர்தம் பெருமை அகில உலகத்தினரையும் வியந்து போற்றச் செய்கின்றது.

## நான்கு வகை இசைக் கருவிகள்

துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள், தோல் கருவிகள், கஞ்சக் கருவிகள் என நான்கு வகைப் படுத்தி இவற்றுள் சிலவற்றை கோவில்களில் பூஜாக் காலங்களின் உபயோகப்படுத்தும் கருவிகளாகவும், மணவினைக்கெனவும் விளையாட்டிற்கு எனவும்: வீரத்திற்கு எனவும், விழாவிற்கு எனவும், வகைப்படுத்தி வைத்துள்ளமையால் தமிழர்தம் இசைப் புலமையை நன்கு தெளிவு

படுத்தலாம். 2,000 ஆண்டுகளுக்குமுன் இயற்றிய காமிக சாஸ்திரத்தில் சர்வ வாத்தியம் கூறப்பட்டுள்ளது. அதாவது 108 வாத்தியங்கள் கோவில் பூஜாக் காலங்களில் உபயோகப்படுத்தும் முறையை விவரித்துக் கூறப்பட்டுள்ளது. இராமாயணம் (கி. மு. 400) பல வித இசைக் கருவிகளைப் பற்றிக் கூறுகின்றது. முக்கியமாக பேரி, துத்தம், மிருதங்கம், புஷ்கரம், முதலியன. அவ்வாறே புறநானூறும், பத்துப்பாட்டும் தோல் கருவிகளைப் பற்றியும் அதன் பெருமைகளைப் பற்றியும் கூறுகின்றன. பரிபாடல் சுரங்களின் பெயரைப் பற்றியும் 7 விதமான பாஷைகளைப் பற்றியும் விவரித்து கூறி உள்ளது. தமிழர்தம் கலைக்களஞ்சியமான சிலப்பதிகாரம் ஏறக்குறைய 2000 ஆண்டுகள் வயதுடைய நூலாம். அதில் அரங்கேற்றம் காதையிலும் இன்னும் பிற காதையிலும் பலவகைப்பட்ட யாழ் இசைக் கருவிகளும் வங்கியம் முதலிய குழல்களும் தமிழர் தம் பெருமையை என்ஞான்றும் ஓதுவனவாம். கோயில்களைக் கட்டிய சிற்பிகளும் என்ஞான்றும் நிற்கும் கோபுரங்களிலும், சிற்பங்களிலும், தேர்களிலும் கைவினைஞர்களின் கை வண்ணங்களிலும் இலக்கியங்களை யாத்த முத்தமிழும் உணர்ந்த முக்காலமும் உரைத்த புலவர் பெருமக்களாலும் பல வகைப்பட்ட இசைக் கருவிகள் பண்டைய தமிழகத்தில் இருந்து மறைந்து பட்டதை அறிகின்றோம்.

மற்றும் அமராவதி, கோலி, வேலூர், அலேபீட், சுசிந்திரம், புதுக்கோட்டை திருமயம், கும்பகோணம், திருநெல்வேலி, தஞ்சை, மதுரை, சிதம்பரம், காஞ்சிபுரம், மாமல்லபுரம், முதலிய கோவில்களின் சிற்பங்களிலிருந்தும். அஜந்தா, எல்லோரா முதலிய குகைக் கோவில்களிலிருந்தும் பலவித இசைக் கருவிகளை நாம் காண்கின்றோம். திருமயத்தின் கோவிலிலிருந்து ஓர் அரிய சிற்பம் காணப்படுகின்றது. அதில் நாரதர் மகர யாழை மீட்டுவது போலவும் தும்புரு, கலாவதி மீட்டுவது போலவும் ஒரு அரிய பொக்கிஷம் காணப்படுகிறது. யாழ் கருவிகள் அஜந்தா குகைகளிலும் காஞ்சி கோவில்களில் உள்ள கல் தூண்களிலும் காணப் படுகின்றன. அவ்வாறே சமுத்திரகுப்தன் பொற் காசுகளிலும் யாழை மீட்டுவது போல் காணப் படுகின்றது. திருஞான சம்பந்தர் சீர்காழி வந்திருந்த போது திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் மனைவி மதங்க சூடாமணியுடன் ஆளுடைய பிள்ளையாரைக் காண வருகின்றார். பிள்ளையார் பாடிய இனிய பதிகங்களை எல்லாம் திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழில் மீட்டி இசைத்து அனைவரையும் மகிழ்வில் ஆழ்த்தினர். தில்லை ஆடலரசனைத் தரிசிக்கும் ஆவல் கொண்டு யாழ்ப்பாணர் சகிதம் தில்லை மூதூரை அடைந்து "கற்றான் தெரியோம்பி" என்னும் பதிகத்தைப் பாடி, இறைவனுக்கே பணி செய்யத்தம்மை அர்ப்பணித்துவிட்ட தில்லை வாழ் அந்தணர்களை அதில் கற்பித்துப் பாடி உள்ளார். திருநீலகண்ட நாயனார் விருப்பத்திற்கு இணங்கி பாணர் அவதரித்த "திருஎருக்கத்தம்புலியூர்" சென்று பாடி உள்ளார். திருஎருக்கத்தம்புலியூரில் திருநீலகண்ட நாயனார் 7 தந்தி உடைய செங்கோட்டி யாழை வாசிக்கும் அரிய சிற்பம் ஒன்று காணப்படு கின்றது. பிறகு யாழின் சுரத்தில் அடங்காத யாழ் முறி பதிகம் ஒன்றை, "மாதர் மடப்பிடி" என்று பாடினார். அச்சமயம் அப்பதிகத்தை யாழினால் வாசிக்க முடியாததினால் திருநீலகண்ட நாயனார் மனம் உடைந்து துயரம் உற்றார். அதற்குத் திருஞான சம்பந்தர் உம்முடைய இசையின் குற்றம் இன்றி யாழின் குற்றம் என விளக்கி கூறினார். அதன் பிறகு தான் 14 தந்தி உடைய "சகோடயாழை" திருநீலகண்ட நாயனார் வாசிக்க ஆரம்பித்தார்.

யாழில் உபயோகப்படுத்தும் நரம்புகளின் எண்ணிக்கை போல் சீறியாழ், செங்கோட்டி யாழ், சகோடயாழ், பேரியாழ், மகரயாழ் எனப் பலவகைப்பட்டன. சிறிய நரம்பு கருவி யாகிய யாழ் தமிழகத்தின் வரலாற்றுக் காலத்தில் தோன்றியது. வில்லில் நாண் ஏற்றி அம்பை எய்யுங்கால் அதில் எழுகின்ற ஓசையைக் கண்டு வில் யாழ் முதலில் உருவாக்கினர். குறிஞ்சி நிலத்தில் குறமக்களிடையே முதலில் வாசிக்கப்பட்டதால் இது குறிஞ்சி யாழாக மலர்ந்தது. நாளடைவில் வளர்ச்சி அடைந்து ஐந்து நிலங்களிலும் பரவியது. பிறகு மக்களின் அறிவின் திறமையால் ஒவ்வொரு நிலத்திலும் யாழானது புது உருவம் பெற்று மறுமலர்ச்சி பெற்றது. இதன் வளர்ச்சியே செய்யுட்களில் வில்யாழ், சீரியாழ், பேரியாழ், சிலப்பதிகாரத் திலும், மணிமேகலையிலும். பெருங்காப்பியத் திலும், சீவக சிந்தாமணியிலும், சகோடயாழ், மகரயாழ், விபஞ்சி யாழ் என்று கூறப்பட் டுள்ளன.

### 1. குழல் வகைகள்

சங்கு, தவள சங்கு, திருச்சின்னம், பூரி, நபூரி, எக்காளம், கவுரி காளம், தாரை

கோணத் தாரை, பெருந்தாரை, முகவீணை பங்கியம், பெருவங்கியம், நாதஸ்வரம், திமிரி நாதஸ்வரம், பாஸ-பாலி நாதஸ்வரம், (சந்தன மரத்தினால் செய்யப்பட்டது) கல் நாதஸ்வரம் (கல்லினால் செய்யப்பட்டது) முதலியன.

## 2. வீணையின் வகைகள்

நகுல வீணை, வேத வீணை, நாக வீணை (5 மேட்டு உடையது.) கின்னரி வீணை, மகத்தி வீணை, மகா வீணை (14 மேட்டு உடையது.) சததந்திரி வீணை (100 தந்தி உடையது), சுர மண்டலி, காட்டியணி வீணை, கர்ம வீணை, பஞ்சரி வீணை முதலியன.

17-ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூரை ஆண்ட ரகுநாத நாயக்கர் மன்னர் காலத்தில் தற்போது நடைமுறையில் உள்ள வீணை உருவத்திலும் நீளத்திலும் அளவிலும் மாற்றப்பட்டு 24 மெட்டுகளுடன் சகல விதமான ராகங்களையும் வாசிப்பதற்கு சௌகரியமாக நிர்ணயிக்கப்பட்டது. அன்று முதல் முற்காலத்தில் உபயோகத்தில் இருந்த வீணைகள் எல்லாம் மறைந்து இந்த வீணை உபயோகத்தில் உள்ளது. அதனால் தான் தஞ்சாவூர் வீணை சிறந்தது என்று கூறுகிறார்கள்.

## 3. தோல் கருவிகள்

சிலப்பதிகாரத்தில் மாதவியினுடைய கூர்ம நாடக அரங்கேற்றத்தில் 18 விதமான தோல் கருவிகள் உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

டமருகம், உடுக்கை, இடை சுருங்கிபறை, துடி, ஒருகட்பறை, பம்பை, இடக்கை, பாங்கம், உபாங்கம், பஞ்ச முக வாத்தியம், குடமுழவு, முரசு, வீரமுரசு, துந்துபி, கினிகிட்டி, குந்துலம், டமாரம், டக்கி, மிருதங்கம் முதலிய பல வகைகள் உள்ளன.

---


*With Best Compliments From*

**INDROL LUBRICANTS & SPECIALITIES LIMITED**

52, Rajaji Road,

MADRAS - 600 001